தமிழ் மொழி

இறுதியாண்டுத் தேர்வு வகுப்பு 04 2013

**பன்முகத்தேர்வு வினாக்கள் பகுதி 1 வருடம்: 04**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பனி என்பது<br>1. snow 2. mountain 3. snow mountain 4. water | 1 | 2 | 3 | 4 |
| 2. | அவள் தொலைபேசியில்<br>1. பேசினார் 2. பேசினார்கள். 3. பேசினோம். 4. பேசினாள். | 1 | 2 | 3 | 4 |
| 3. | சாப்பாடு என்பது<br>1. பத்திரிகை 2. சமையல் 3. உணவு 4. படம் | 1 | 2 | 3 | 4 |
| 4. | மாசி மாதத்தில் --------------- நாட்கள் உண்டு.<br>1.30 2. 31 3. 20 4. 28 | 1 | 2 | 3 | 4 |
| 5. | வானொலி என்பது<br>1. telephone 2. television 3 radio 4. clock | 1 | 2 | 3 | 4 |
| 6. | ஆசை என்பதன் எதிர்ச்சொல்.<br>1. விருப்பு 2. வெறுப்பு 3. ஆழம் 4. ஆக்கம் | 1 | 2 | 3 | 4 |
| 7. | நண்பி என்றால்.<br>1. இளவரசி 2. அம்மா 3. அரசி 4. தோழி | 1 | 2 | 3 | 4 |
| 8. | கொண்டாட்டம் என்பது<br>1. விடுமுறை 2. லீவு 3. வேலைநாள். 4. திருவிழா. | 1 | 2 | 3 | 4 |
| 9. | Aeroplane என்பது -<br>1. பேருந்து 2. புகைவண்டி 3.மாட்டுவண்டி 4. விமானம் | 1 | 2 | 3 | 4 |
| 10. | Summer என்பது<br>1. பனிக்காலம் 2. மழைக்காலம் 3. இலையுதிர்காலம்.<br>4. கோடைகாலம் | 1 | 2 | 3 | 4 |
| 11. | பாவற்காய். 1. இனிக்கும் 2.புளிக்கும் 3. கசக்கும் 4. துவர்க்கும் | 1 | 2 | 3 | 4 |
| 12. | நுளம்பால் வரும் நோய்<br>1. தடிமன் 2. காய்ச்சல் 3. மலேரியா 4. வீக்கம் | 1 | 2 | 3 | 4 |
| 13. | எங்கள் உடைகள் மழையில்<br>1. நனைந்தது 2. நனைப்பார் 3. நனைக்காதே 4. நனைந்தன | 1 | 2 | 3 | 4 |
| 14. | தழிழோசை என்பதை பிரித்தால்<br>1. தமிழ்-ஓசை 2. தமி-லோசை 3. தமுள்-ஓசை<br>4. தம்-ஓசை | 1 | 2 | 3 | 4 |
| 15. | வெண்மை என்பது<br>1. வெள்ளை 2. மென்மை 3. பன்மை 4. வெள்ளி | 1 | 2 | 3 | 4 |
| 16. | ------------ வயலை உழுதார்கள்<br>1 நாங்கள் 2. நான் 3. நாம் 4. அவர்கள் | 1 | 2 | 3 | 4 |
| 17. | காந்தத்தை கவர்வது<br>1. இரும்பு 2. எறும்பு 3. எலும்பு. 4. இருட்டுபு | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18. | Once upon a time என்பது<br>1. ஒருநாள் 2. முன்னொருநாள் 3. பழைய 4. நேற்று | 1 | 2 | 3 | 4 |
| 19. | எஜமான் எதிர்பால் சொல்<br>1. தலைவி 2. வேலைக்காரி 3. மாணவி 4. எஜமானி | 1 | 2 | 3 | 4 |
| 20. | பட்டு ஆடை என்பது<br>1. nylon 2. silk 3. fiber; 4. cotton | 1 | 2 | 3 | 4 |
| 21. | அவுஸ்திரேலியாவின் புதிய பிரதம மந்திரி<br>1. Howard 2. Bush 3. Kevin Rodd 4. Tony Abbott | 1 | 2 | 3 | 4 |
| 22. | வெண்பா என்பது<br>1. தமிழ் பாடல் 2. வெள்ளைப்பால் 3. நாலடி தமிழ்ப் பாடல் 4. வெளியே பார் | 1 | 2 | 3 | 4 |
| 23. | எங்கள் வேலையை நாங்களே<br>1. வந்தன. 2. செய்தோம். 3. செய்தன 4. செய்தான். | 1 | 2 | 3 | 4 |
| 24. | அவுஸ்திரேலியா கொடியில் இருக்கும் நட்சத்திரங்கள் எத்தனை?<br>1. நான்கு 2. எட்டு 3. ஆறு 4. ஐந்து | 1 | 2 | 3 | 4 |
| 25. | பசு புல், இலை என்பவற்றை ------- உண்ணும்.<br>1. உணவுக்கு 2 . உணவாக 3. உணவில் 4. உணவால் | 1 | 2 | 3 | 4 |
| 26. | நவதானியம் என்பது ---- தானியவகைகள்<br>1. ஆறு 2. ஐந்து 3. ஒன்பது 4. எட்டு | 1 | 2 | 3 | 4 |
| 27. | பட்டி மன்றம் என்பது<br>1. சங்கீதம் 2. திருமணம் 3. விவாதம் 4. நாடகம் | 1 | 2 | 3 | 4 |
| 28. | நீளம் என்பது -<br>1. strong 2. soft 3. long 4. short | 1 | 2 | 3 | 4 |
| 29. | Language என்பது<br>1. மொழி 2. மொளி 3. மொலி 4. மௌழி | 1 | 2 | 3 | 4 |
| 30. | அந்தக் குழந்தை ---------- என்று கத்தியது.<br>1. வள்வள் 2. குவாகுவா 3. மியாவ் மியாவ் 4. கூகூ | 1 | 2 | 3 | 4 |

**(30 புள்ளிகள்)**

தமிழ் மொழி

இறுதியாண்டுத் தேர்வு வகுப்பு 04 2013

**வினாக்கள்** **வருடம்: 04**

1.**பின்வரும் பந்தியை வாசித்து கேள்விகளுக்குப் பதில் எழுதுக.**

பழமொழிகள் - நம் முன்னோர்கள் நமக்கு அளித்த செல்வங்கள். அவை நமது முன்னோர்களது அனுபவ மொழிகள். அவை அரிய கருத்துக்களை எமக்கு கூறுகின்றன. மனித சமுதாயத்துக்கு நல்வழி காட்ட வல்லன. நமது மொழியில் பல பழமொழிகள் உண்டு. அதிலிருந்து பல உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம்.
உ-ம் இளமையில் கல்வி சிலையில் எழுத்து,
ஊருடன் கூடிவாழ்,
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது,
ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்,
ஆற்றில் போட்டாலும் அளந்து போடு,
உப்பிட்டவரை உள்ளளவும் நினை,
தூரத்துப்பச்சை கண்ணுக்கு குளிர்ச்சி.

1. பழமொழிகள் என்றால் என்ன?

_______________________________________________

2. அதிலிருந்து என்ன அறிந்து கொள்ளலாம்?

_______________________________________________

3. 'சிறுவயதில் கல்வி கற்க வேண்டும்' எனறு எந்த பழமொழி கூறுகிறது?

_______________________________________________

4. சிறுவயதில் சோம்பலாக இருக்கக் கூடாது என எது கூறுகிறது?

_______________________________________________

5. எதையும் யோசித்துதான் செய்ய வேண்டும் என எந்த பழமொழி கூறுகிறது?

_______________________________________________

**(10 புள்ளிகள்)**

**2. பின்வரும் சொற்களைக் கருத்தமைய ஒழுங்கு செய்து எழுதுக.**

சுத்தமாக - எப்போதும் - நாம் - இருக்கவேண்டும்.

___

ஏலியை – அந்த – பூனை – துரத்தியது

___

உணவு - மரக்கறி – பச்சை - சிறந்தது – உடலுக்கு

___

வளர்ப்போம் - மரம் - காப்போம் - சூழலைக்

___

பாடசாலைக்கு – அவனும் - சென்றார்கள் - தம்பியும்

___

**(10 புள்ளிகள்)**

**3. சேர்த்து எழுதுக** **பிரித்து எழுதுக**

| | | | |
|---|---|---|---|
| கல் - சிலை | ________ | கல்லுருவம் | ________ |
| காலம் - பெயர் | ________ | நூற்றாண்டு | ________ |
| பத்து - நான்கு | ________ | பனித்திரை | ________ |
| முன் - பகல் | ________ | தமிழோசை | ________ |
| உலகம்-அறிய | ________ | சிற்றாறு | ________ |

**(10 புள்ளிகள்)**

**4. சரியான சொல்லை தெரிவு செய்து எழுதுக.**

சிறுதுளி பெரு (வெல்லம், வெள்ளம்,).

அவளது எடை 60 (கிலோ, , கிராம்) __________ இருந்தது.

__________ வளையாதது ஐம்பதில் வளையுமா? (ஐந்தில், நூறில்)

மல்லிகை மலர் __________ இருந்தது. ( மனமாக, மணமாக,)

உண்மையான நண்பனை ( ஆபத்தால், ஆபத்தில்) __________ அறியலாம்.

சீனி தண்ணீரில் __________ (கரைந்தது, கறைந்தது)

நாட்டியக; __________ பயில விரும்பினாள் (கலை, களை)

வானத்தில் ___________ வட்டமிட்டது (பறவை, பரவை)

சித்திரமும் கைப் _________ என்பார்கள். (பழக்கம், பலக்கம்)

அந்த (அறைக்கு, அரைக்கு) ___________ அருகில் போய் நின்றான்.

**(10 புள்ளிகள்)**

**5. ஒத்த சொற்கள் எதிர்ச்சொற்கள் தருக**

| | | | |
|---|---|---|---|
| விருப்பு | ____________________ | சோம்பல் | ____________________ |
| மகிழ்ச்சி | ____________________ | நண்பன் | ____________________ |
| தந்தை | ____________________ | இளமை | ____________________ |
| மாதா | ____________________ | ஏழை | ____________________ |
| ஆலயம் | ____________________ | குறைவு | ____________________ |

**(10 புள்ளிகள்)**

**6. நீர் ரசித்த தொலைக்காட்சி நிகழ்ச்சி பற்றி 10 வசனங்கள் எழுதுக.**

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

**(10 புள்ளிகள்)**

**7. பின்வரும் பந்தியை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க**

வானொலி சிறந்த ஊடகமாகும். உலகில் உள்ள தொடர்பு சாதனங்களில் இதுவும் ஒன்று. மார்க்கோனி என்பவர் இதனைக் கண்டுபிடித்தார். இக்காலத்தில் வானொலி இல்லாத வீடுகளே இல்லை எனலாம். வுானொலி மூலம் செய்திகள் அடிக்கடி ஒலிபரப்பாகின்றன. பல வகையான நிகழ்ச்சிகளை நாம் அறிகிறோம். உலகில் நடப்பவற்றை உடனுக்குடன் அறிய முடிகிறது. வுானொலியில் சிறுவர்களுக்கான கலை நிகழ்ச்சிகள் கல்வி நகிழ்சிகள் நடைபெறுகின்றன.

**(10 புள்ளிகள்)**